25.02.2026

O.S.No.92/2024

PW1- சரஸ்வதி – க/பெ. நாராயணன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 4,6 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில்)

1. என் தாத்தா பெயர் ராமகிருஷ்ணன் என்றால் சரிதான்.

2. வழக்கு தபசில் சொத்து ஆதியில் ராமகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. ராமகிருஷ்ணனுக்கு சண்முக வேலம்மாள், சந்தணம்மாள் ஆகிய 2 பெண்பிள்ளைகள் என்றால் சரிதான்.

4. சண்முகவேலம்மாளின் கணவர் பெயர் ரத்தினசாமி என்றால் சரிதான். இவர்களுக்கு ராமகிருஷ்ணன் மற்றும் பலவேசம் ஆகிய ஆண்மக்களும்., நானும், லட்சுமி மற்றும் களஞ்சியம் ஆகிய பெண்மக்களும் வாரிசுகளாக உள்ளோம் என்றால் சரிதான்.

5. நான் சிறுவயதிருக்கும் போது சண்முகவேலம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

6. சண்முகவேலம்மாள் இறந்த பின் என் தகப்பனார் முப்புடாதி என்ற பெண்ணை 2ம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

7. என் அப்பாவுடன் ராமகிருஷ்ணன் மற்றும் பலவேசம் ஆகியோர்

வசித்து வந்தனர் என்றால் சரிதான். நானும், பெண் மக்களும் என் அப்பாவோடு வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. என் பாட்டி வளர்ப்பில் இருந்தோம்.

8. சண்முகவேலம்மாள் இறக்கும் முன்பே என் தாத்தா மற்றும் பாட்டி இறந்துவிட்டனர் என்றால் சரியல்ல.

9. ரத்தினசாமிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை உண்டா என்றால் உண்டு.

10. ரத்தினசாமி தபசில் சொத்துக்களைப் பொறுத்து ஆண்மக்களுடன் சேர்ந்து முப்புடாதியம்மாளுக்கு ஏற்பாட்டு ஆவணம் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல.

11. ரத்தினசாமியும் முப்புடாதியம்மாளும் சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான் நாங்கள் கொடுக்கவில்லை.

12. எங்கள் அனுமதியின்றி தான் ரத்தினசாமியும் முப்புடாதியம்மாளும் அனுபவம் செய்தார்கள் என்றால் சரிதான்.

13. ரத்தினசாமியும் முப்புடாதியம்மாளும் மற்ற ஆண்மகன்களும் சேர்ந்து ஜீனலாதின் என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

14. ரத்தினசாமி மற்றும் முப்புடாதியம்மாளுக்கு பிறகு அருளம்மாள் கணவர் பாக்கியநாதன் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

15. பாக்கியநாதன் 1989 ஆம் ஆண்டு முதல் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் பயிர் செய்யும் போது அவர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றதாக புகார் கொடுத்தார்.

16. பாக்கியநாதன் 1989 ல் கிரையம் பெற்றதாக காவல் நிலையத்தில் கூறினார் என்றால் சரிதான்.

17. பாக்கியநாதன் 1991 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

18. பாக்கியநாதன் இறந்த பின் அருளம்மாளும் அவரது பிள்ளைகளும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

19. அருளம்மாள் சொத்துக்களை தனது ஆண்மகன்களான ஏசுதாசன், சின்னப்பன், ஜோசப்ராஜ் ஆகியோர்களுக்கு பிரித்து கொடுத்தார் என்றால் சரிதான் எனது சொத்தை எவ்வாறு அவர்கள் பிரிக்கலாம்.

20. நான் 2002 ம் வருடம் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சொத்து என் வசம் அனுபவத்தில் இல்லை என்றும் அருளம்மாள் வசம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

21. அந்த வழக்கில் பெண்மக்களான என்னுடன் பிறந்த 1ம் பிரதிவாதி மற்றும் இறந்துபோன களஞ்சியம் மற்றும் எனக்கும் பாகப்பிரிவினையில் பாகம் கிடைத்ததாக 2002ம் வருடம் தாக்கல் செய்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

22. அந்த வழக்கில் அருளம்மாள் முதலில் ஆஜராகாமல் ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகியது என்றால் சரிதான்.

23. ஒரு தலைபட்ச தீர்ப்பாணையை வைத்து அம்பாசமுத்திரம் காவல் துணை கண்காணிப்பாளர் உதவியுடன் வழக்கு சொத்தில் அனுபவம் செய்ய முயற்சித்தோம் என்றால் சரிதான்.

24. அருளம்மாள் ஒரு தலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யக் கோரி ஒரு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு எதிர் உரையில் அருளம்மாள் என் வசம் சொத்தை 2003ம் ஆண்டு ஒப்படைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

25. அருளம்மாளின் ஆண்மக்கள் சொத்தை அவர்கள் அனுபவம் செய்வதை தடை செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் அருளம்மாள் ஆண்மக்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்து மேல்முறையீட்டு எண்.57/2012 தள்ளுபடியாகியது என்றால் சரிதான்.

26. 2002ம் ஆண்டு அருளம்மாள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது சொத்துக்கள் சம்மந்தமாக அருளம்மாள், ஏசுதாசன், சின்னப்பன் பெஸ்ட், ஜோசப்ராஜ் உரிமை கோருவது தெரியவந்தது என்றால் சரிதான்.

27. 2002ம் வருட வழக்கில் எனக்கு பாகம் மூலம் சொத்து கிடைத்ததாக கட்சி செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலைக்காது என்று தெரியவந்தவுடன் அதனை மேல்நடத்தாமல் வாபஸ் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

28. தற்போது என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கும், என் சகோதரிகளுக்கும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

29. அருளம்மாள், ஏசுதாசன், சின்னப்பன் பெஸ்ட், ஜோசப்ராஜ் ஆகியோர்களுக்கு சொத்தில் உரிமை இருப்பதாக நான் வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான்.

30. அருளம்மாள், ஏசுதாசன், சின்னப்பன் பெஸ்ட், ஜோசப்ராஜ் ஆகியோரிகளிடம் நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

31. அருளம்மாள், ஏசுதாசன், சின்னப்பன் பெஸ்ட், ஜோசப்ராஜ் ஆகியோர்கள் தான் 1989ம் வருடம் முதல் என் உரிமையை மறுத்து சொத்தை அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரிதான்.

32. அருளம்மாள், ஏசுதாசன், சின்னப்பன் பெஸ்ட், ஜோசப்ராஜ் ஆகியோர்கள் பெயரில் தான் பட்டா மற்றும் தீர்வை ரசீது நாளது வரை உள்ளது என்றால் சரியல்ல.

33. எனக்கும் தபசில் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் என் பிராது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ஏற்கனவே பாகம்பிரிக்கப்பட்டது என வாதம் செய்ததால் முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

34. களஞ்சியமோ, 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவர்களது வாரிசுகளோ என்னுடன் கட்சி செய்யாமலும், தபசில் சொத்தில் பாகம் கேட்காமலும் இருப்பதால் இது எனது தவறான கட்சியைக் குறிக்கும் என்பதாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி